முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திருமூலர் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

24.12.2018, திங்கட்கிழமை

1. **ஆறுமுகனார் சக்தி நிறைந்த குருவே**
**அறமும் தவமும் அடைந்த குருவே**
**ஆறுமுகப்பெருமான் அவதாரமாக வந்த**
**அருட்குருவே ஆறுமுக அரங்கனே**

2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் ஒளி சூட்சும நூலை
வரங்களாக **விளம்பி சிலை திங்கள்**
**வல்லமைபட நவதிகதி சோமவாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 9ம் நாள் 24.12.2018, திங்கட்கிழமை)**

3. வாரமதில் **திருமூலர் யானும்**
வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற
சோரம்போகார் ஞானவழி வந்தவர்
சுத்தநெறி ஏற்றவர் பிறவி கடப்பார்

4. கடக்கவே சன்மார்க்க வழி காட்டும்
கருணைமிக்க குரு அரங்கன்
தடைபடா தருமவழியை தொடர
தவமிக்க அரங்கமகான் தீட்சை ஏற்றுவர

5. வரமென உலகோரின் நிலைகள்
வல்லமை கூடும் வளர்ச்சி காணும்
தரணியெங்கும் அரங்கன் கொள்கை
தரும கொள்கை ஏற்கப்படவே

6. ஏற்கப்படவே உலகம் எங்கும்
எல்லோரும் சமம் எனும் நிலையும்
ஏற்கப்படவே இயற்கைப் பேரிடரும்
எங்கும் எக்காலமும் அணுகா பாதுகாப்பு பலமும்

7. பலமும் இயற்கை வளமும் கூடி
பாருலகினில் மாற்றம் காணும்
பலமிக்க தலைமை ஆளுமைகள்
பரவி உலகே ஞான ஆட்சிக்கு வரும்

8. ஞான ஆட்சி அமைந்திடவே
ஞானிகளின் வெளிப்பாடு பெருகி வர
ஞானம் தேடி அலையும் மக்களெல்லாம்
ஞானதேசிகன் ஞானசபைக்கு வர

9. வருகவே சூட்சும வரம் கிட்டி
வருகின்ற மக்களின் மூலமே
தருமம் பெருகி தரும உலகமாகி
தணிகைவேலன் தலைமைக்கு வரும்

10. வருகவே ஞானிகள் பூசையோடு
வருமுலகில் வலுவான தருமம் பெருக்கி
முருகா அரங்கா எனும் செபதபம்
மூவுலகும் கேட்கும்படி செய்ய வேணும்

11. வேண்டி வேண்டி அரங்கர் படை
விடாது தொடர் வழிபாடு செய்ய
உண்டாகும் ஞானயுக மாற்றம்
உரைத்திட்ட ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் திருமூலர் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

முருகப்பெருமானின் சத்தியே வடிவான மகா ஞானகுருவே எண்ணிலா அறசக்தியும் தவமும் நிறைந்திட்ட வள்ளல் ஞான தவயோக குருவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட அருட்குருவே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 9ம் நாள் 24.12.2018, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே திருமூலர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருமூலர்.

அரங்கனின் ஞானவழிதனை பின்பற்றி வந்தவர் எவரும் வீண்போக மாட்டார்கள். ஆறுமுக அரங்கனின் தூயநெறியினை ஏற்றுக்கொண்டு கடைப்பிடிப்பவர்கள் எல்லாம் பிறவியை கடந்து பிறவியை வெல்வார்கள்.

பிறவிப் பெரும்பேற்றை கடந்திடவே வல்லமைமிக்க மார்க்கமான சன்மார்க்க நெறியினை காட்டுகின்ற கருணைமிக்க குரு ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் தானதரும வழிகளை தடையின்றி செய்து வர வேண்டும். தவசக்திமிக்க ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடிகளே தஞ்சம் என்றடைந்து தீட்சை உபதேசம் அடைந்து உபதேச வழி நடந்திட வேண்டும். இவ்விதமே செய்து வரவர, உலக மக்களின் நிலைகளெல்லாம் மாறி வல்லமைகள் கூடி நிற்குமப்பா, வளர்ச்சிகளை அவர்கள் காண்பார்கள்.

உலகமெங்கும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஞானக்கொள்கைகள், தருமக்கொள்கைகள் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டால் உலகம் எங்கும் எல்லோரும் சமம் எனும் நிலையும் ஏற்கப்பட்டால் உலகினில் இயற்கை பேரிடர்கள் எங்கும் எக்காலத்தும் வராமல் ஞானிகளின் அருள் பாதுகாப்பும் பலமும் பெருகிடும், இயற்கையும் மகிழ்ந்து பாதுகாப்பு தரும். உலகினில் இயற்கை வளமும் பெருகி உலகமெலாம் நல்ல மாற்றங்கள் உருவாகும்.

உலகினில் நாட்டினை ஆள்பவர்கள் பலம்மிக்க நல்ல தலைவர்களாக அமைவார்கள், பண்புடையோர் ஆட்சிபுரிவார்கள். உலகமெங்கும் நல்லாட்சி மலர்ந்து உலகமே முருகப்பெருமானின் ஆட்சிக்கு கீழ் வந்து உலகமெலாம் ஞானஆட்சியாக மாறிடும்.

உலகினில் ஞானஆட்சி அமைந்திட ஞானிகளின் வெளிப்பாடு அதிகமாகிட வேண்டும். ஞானிகளின் வெளிப்பாடு பெருகிட வேண்டுமாயின் ஞானத்தைத் தேடி உலகமெலாம் அலைந்து கொண்டு உண்மை ஞானத்தினை அடைய முடியாமலும், உண்மை குருவை காண முடியாமலும் தவிக்கும் அவர்களெல்லாம் ஞானமே வடிவான ஞானதேசிகன் ஆறுமுக அரங்கனின் ஞானசபையாம் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு வர வேண்டும்.

அவர்களெல்லாம் அரங்கன் சபைக்கு வந்திட்டால் அவர்கள் விரும்பும் ஞானத்தின் சூட்சுமங்கள் வரமாக கிடைக்கப்பெற்று வருகின்ற மக்களின் மூலமாகவே உலகின் தருமம் பெருகி உலகமே தருமஉலகமாக ஆகி முருகப்பெருமானின் தலைமைக்கு கீழ் இவ்வுலகம் வந்திடும்.

ஆதலினால் உலகினில் ஞானம் தேடி அலையும் அன்பர்கள் ஓங்காரக்குடிலை நோக்கி வரவும், உலகில் ஞானிகளின் வெளிப்பாடு பெருகிடவும், உலகினில் தருமபலம் பெருகிடவும், உலகம் ஞானஉலகமாக ஆகிடவும் உலகினில் முருகப்பெருமானின் ஞான ஆட்சி அமைந்திடவும் அரங்கனின் தொண்டர்கள் எல்லாம் அயராது ஞானிகளை பூஜை செய்திட வேண்டும். ஞானிகளை பூஜை செய்வதோடு மட்டுமன்றி வருங்காலங்களில் உலகினில் தருமச்செயல்களை அதிகப்படுத்தி உலகின் தருமபலத்தை பெருக்கிட வேண்டும். முருகா, முருகா, முருகா அரங்கா எனும் ஜெபதபங்கள் மூவுலகிற்கும் கேட்கும்படியாக வலுவுடன் உளமார மனம் உருகி செய்திட வேண்டும்.

வல்லமைமிக்க அரங்கனின் படை, வேண்டி வேண்டி இடைவிடாது தொடர்ந்து உளம் உருகி வழிபாடுகளை செய்து வரவர, உலகினில் ஞானயுக மாற்றம் உண்டாகிடும் என யுகமாற்றம் அரங்கன் படையினால் உருவாகிடும் என்பதை உலகிற்கு ஒளி சூட்சும நூல் மூலம் அறிவுறுத்துகிறார் மகான் திருமூலர்.

–சுபம்–